EDITOR: MUZZAMMIL AHMAD
SUB EDITOR: RAFEEQ AHMAD
Mob: +91-9888567232

E-Mail: badarqadian@gmail.com
www.alislam.org/badr

Registered with registrar of the newspapers for India at No. PUNTAM/2016/68785

*The Weekly* **BADAR** *Qadian*

*Qadian - 143516 Distt. Gurdaspur (Pb.) INDIA*

POSTAL REG NO GDP-39/2017-2019 - Vol. 2 Thursday 21-28 December 2017 Issue No. 51-52

MANAGER :
NAWAB AHMAD
Tel. : +91- 1872-224757
Mobile : +91-94170-20616
e -mail:managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIBTION: Rs. 300/- (WEIGHT: 190 grms)

## உலக முழுவதிலும் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக செய்யப்படும் மனிதகுல தொண்டு தொடர்பான சில காட்சிகள்





நூர் மருத்துவமனை – காதியான்





Tahir Heart Institute ரப்வா – பாகிஸ்தான்





ஜெர்மனியிலுள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக ஆப்ரிக்காவில் கண் சிகிச்சைக்கான அல்–அய்ன் மொபைல் கிளினிக்





Humanity First சார்பாக நிவாரணம் வழங்கும் காட்சி

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

அஹ்மதிய்யா ஜமாஅத்தும் மனிதகுலத் தொண்டும்

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பத்ர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி
2

ஆண்டு சந்தா
ரூபாய் 300/-

இதழ்
51-52

ஆசிரியர்
முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர்
ரஃபீக் அஹ்மது

2–9 ரபிவுஸ் ஸானி 1439 ஹிஜ்ரி கமரி | 21–28 ஃபத்ஹ் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி | 21–28 டிசம்பர் 2017 **Postal Reg. No. GDP-39/2017-2019**

کُنۡتُمۡ خَیۡرَ اُمَّۃٍ اُخۡرِجَتۡ لِلنَّاسِ
تَاۡمُرُوۡنَ بِالۡمَعۡرُوۡفِ وَتَنۡہَوۡنَ عَنِ الۡمُنۡکَرِ

மக்களு(டைய பயனு)க்காகத் தோற்றுவிக்கப்பட்ட நீங்கள் (மற்றெல்லாரையும் விட) சிறந்த கூட்டத்தினர் ஆவீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள்; தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள். (3:111)

اَلۡخَلۡقُ عِیَالُ اللّٰہِ فَاَحَبُّ الۡخَلۡقِ اِلَی اللّٰہِ مَنۡ اَحۡسَنَ اِلٰی عِیَالِہٖ (بیہقی فی شعب الایمان)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: எல்லா படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பத்தினர் ஆவர். எனவே அல்லாஹ்வின் குடும்பத்தினருடன் நல்ல முறையில் நடந்து கொள்பவரே அவனுக்கு தனது படைப்பினங்களில் அதிக நேசத்திற்குரியவர் ஆவார். (பைஹக்கி ஃபீ ஷுஃ பில் ஈமான்)

اَلرَّاحِمُوۡنَ یَرۡحَمُہُمُ الرَّحۡمٰنُ اِرۡحَمُوۡا اَہۡلَ الۡاَرۡضِ یَرۡحَمۡکُمۡ مَنۡ فِی السَّمَآءِ (ابوداؤد کتاب الادب)

ஹஸ்ரத் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: கருணை காட்டுபவர்கள் மீது அருளாளனாகிய இறைவன் கருணை காட்டுவான். நீங்கள் பூமியில் உள்ளவர்களிடம் கருணை காட்டுங்கள். அப்போது வானத்திலுள்ளவன் உங்கள் மீது கருணை காட்டுவான். (அபூ தாவூது – கிதாபுல் அதப்)







பிரித்தானியா ஆண்டு மாநாடு 2017–ன் சில அழகிய காட்சிகள்




பிரித்தானியாவின் 14–வது தேசிய அமைதி கருத்தரங்கு 2017–ன் மேடையில்
ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் சொற்பொழிவு ஆற்றும் காட்சி



பிரித்தானியாவின் 14–வது தேசிய அமைதி கருத்தரங்கு 2017– ல் ஹுஸூர் அவர்களுடன் இந்திய பிரதிநிதிகள்.
ஹுஸூர் அவர்களின் வலப்புறத்தில் வக்கீல் சாஹிப் தஃபீலோ தன்ஃபீஸ் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்






ஜெர்மனியிலுள்ள கீஸன் நகரத்திலுள்ள 21 ஆகஸ்டு 2017 அன்று
மஸ்ஜிதுஸ் ஸமது திறப்பு விழாவின் படங்கள்









ஜெர்மனி ஆண்டு மாநாடு 2017–ன் சில அழகிய காட்சிகள்

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

இலண்டன்
MA 29-9-2017

**இஸ்லாம் நம்மில் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்வதற்கும், ஒருவர் மற்றவருக்கு தொண்டு செய்வதற்குமுள்ள பாடத்தை கற்பிக்கின்றது.**
**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கமும், குறிக்கோளும், ஆசையும் தமது எஜமானரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றியவாறு படைப்பினத்திற்கு தொண்டு செய்வதாகவே இருந்தது.**
**படைப்பினங்களுக்கு தொண்டு செய்வது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தனிச்சிறப்பாகும். அல்லாஹ் உலகிலுள்ள எல்லா அஹ்மதிகளுக்கும் இதனையே தங்களது குறிக்கோளாகக் கருதி செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.**

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு த்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் சிறப்புமிகு தூதுச்செய்தி

அன்பார்ந்த பத்ர் வாசகர்களுக்கு!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரக்காத்துஹு

பத்ர் வாரப் பத்திரிகைக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தும் மனித குலத்திற்கு செய்யும் தொண்டும் என்ற தலைப்பில் ஒரு சிறப்பிதழை வெளியிடுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அல்லாஹ் இந்த வெளியீட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. ஆமீன்.

இந்த சந்தர்ப்பத்தில் தூதுச்செய்தியை அனுப்பிவைக்குமாறு என்னிடம் வேண்டப்பட்டிருக்கின்றது. எனது தூதுச்செய்தி இதுவாகும்:

இஸ்லாம் நமக்கு பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்வது மற்றும் ஒருவர் மற்றவருக்கு தொண்டு செய்வது ஆகியவற்றிற்கான பாடத்தையே கற்றுத் தந்துள்ளது. திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: அம்மா மாயன்ஃபவுன்னாஸ ஃபயம்கிஸு ஃபில் அர்ழ்: அதாவது எந்த பொருள் மக்களுக்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கின்றதோ அது பூமியில் தங்கி விடுகிறது. இவ்வாறே அருளுக்குரிய நபிமொழி ஒன்றில் எவர் தனது சகோதரருக்கு உதவி செய்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் உதவி செய்கின்றான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் மனிதர்களுக்கு செய்து வரும் தொண்டைப் பற்றி கூறுவதாக இருந்தால் இந்த அம்சத்தைப் பொருத்தவரையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்மாதிரியானது இந்த காலத்தில் எல்லாரையும் விடவும் தனிச்சிறப்புமிக்கதாகவும், உயர்ந்த அந்தஸ்தை கொண்டதாகவும் திகழ்கின்றது.

அன்னாரது நோக்கமும், குறிக்கோளும், ஆசையும் தமது எஜமானரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றியவாறு படைப்பினங்களுக்கு தொண்டு செய்வதாகவே இருந்தது. சில நேரங்களில் அவர்கள் தமது கைகளால் விருந்தோம்பல் செய்துள்ளார்கள். சில நேரங்களில் நோயாளிகளை நலம் விசாரித்திருக்கின்றார்கள். சில நேரங்களில் விதவைகளின் தேவைகளை நிறைவேற்றி இருக்கின்றார்கள். சில நேரங்களில் அனாதைகளுக்கு ஆதரவு காட்டியுள்ளார்கள். இவையெல்லாம் அவர்களது நடைமுறையிலிருந்து நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. பலமுறை அவர்கள் சுயமே பயன்படுத்தி வந்த தொப்பி, காலணி, ஆடைகள் போன்றவற்றையும் கூட தமது ஊழியர்களுக்கு அவர்கள் வழங்கியுள்ளார்கள். அவர்கள் தமது வீட்டில், தேவைப்படுகின்றவர்களுக்காக மருந்துகளை வரவழைத்து வைத்திருந்தார்கள்.

அவர்கள் வீட்டிலிருந்த ஒரு குழந்தை அழுது கொண்டிருந்தது. முதலில் அந்த குழந்தைக்கு உணவை வழங்கினார்கள். பிறகும் கூட அந்த குழந்தை அமைதியாக இருக்கவில்லை. பிறகு சுயமே தனக்காக வைக்கப்பட்டிருந்த உணவையும் அந்த குழந்தைக்கு கொடுத்து அதை திருப்திப்படுத்தினார்கள்.

ஒரு பெண்மணியின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு வழியில் நின்றவாறு அவர்களது கடிதத்தை அவருக்கு படித்துக் காட்டினார்கள். இன்னொரு பெண், தனது மகன் மரணமடைந்து விட்டதால் அந்த துயரத்தை தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்த மகனுக்கு எந்த அளவு நீண்ட ஜனாஸா தொழுகையை அன்னார் தொழவைத்தார்கள் என்றால் அந்த மகன் சொர்க்கத்தில் நுழைந்துவிட்டார் என்ற நற்செய்தியை அந்த பெண்ணுக்கு அவர்கள் தெரிவித்தார்கள்.

சுருக்கமாக, இறைவனின் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் அவர்களுக்கு தொண்டு செய்வதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சிறப்பான பண்பாக இருந்தது. தன்னை பின்பற்றுபவர்களுக்கும் கூட அவர்கள் இந்த போதனையைத் தான் வழங்கினார்கள். அவர்களிடம் பைஅத் செய்பவர்களுக்காக பைஅத் நிபந்தனைகளில் இந்த நிபந்தனையையும் அவர்கள் நியமித்திருந்தார்கள்:

பொதுவாக அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதில் அல்லாஹ்வுக்காகவே முழுமையாகவே ஈடுபட்டு வருவேன். என்னால் இயன்ற வரை இறைவன் எனக்கு வழங்கியுள்ள ஆற்றல்கள் மற்றும் அருள்களின் மூலமாக மனித இனத்திற்கு பயன் அளிக்கும் வகையில் நடந்து கொள்வேன்.

அன்னார் தமது ஜமாஅத்திற்கு போதனை செய்தவாறு இவ்வாறு கூறகின்றார்கள்:

முழு மனித இனத்துடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதே நமது வழிமுறையாகும். ஒரு நபர் தமது பக்கத்து வீட்டிலுள்ள இந்து ஒருவரின் வீடு தீப்பற்றி எரிவதை பார்க்கின்றார். அதை அணைப்பதற்காக உதவி செய்ய அவர் எழுந்து செல்லாமல் இருந்தால் அவர் என்னைச் சார்ந்தவர் அல்ல என்று உண்மையாகவே நான் உங்களுக்கு கூறிக் கொள்கின்றேன். நமது சீடர்களில் ஒருவர் ஒரு கிறித்தவர் கொலை செய்யப்படுவதை பார்க்கின்றார். அவரை விடுவிப்பதற்காக அவர் உதவி செய்யாமல் இருந்தால் அவர் நம்மை சார்ந்தவர் அல்ல என்பதை முற்றிலும் சரியாகவே நான் கூறிக் கொள்கின்றேன்.

(சிராஜே முனீர், ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 28)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றிச் சென்றவாறு அவர்களின் நேசத்திற்குரிய ஜமாஅத்தும் கூட தியாக உணர்வுகளில் திழைத்திருந்தது. உலகம் முழுவதும் இறைவனின் படைப்பினங்களுக்கு தொண்டு செய்கின்ற பல்வேறு பணிகளை அது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஜமாஅத் சகோதரர்களுக்கு பெற்றோர்களுக்கு தொண்டு செய்வது, சந்ததிகளுக்கு தர்பிய்யத் வழங்குவது, மனைவி மக்களை கவனித்துக் கொள்வது, உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது, அண்டை வீட்டுக்காரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது, பெரியவர்களுக்கு கண்ணியமளிப்பது, நோயாளிகளை விசாரிப்பது, ஏழைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் உதவுவது, பொது மக்களுக்கு பயன் தரும் பல்வேறு பணிகளில் பங்கு பெறுவது தொடர்பான போதனைகளை செய்கின்றது. அவற்றை செயல்படுத்துவதற்கு நேர்மறையான சிந்தனையுடன் செயல்பட்டு சமுதாயத்திற்கு பயனுள்ள அங்கமாக அவர்கள் திகழ்ந்தது நிரூபிக்கப்பட்டிக்கின்றது.

இவ்வகையில் வாழ்விற்குத் தேவையான முக்கிய விஷயங்களை கற்றுக் கொடுக்கின்ற இந்த தொண்டை அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வருகிறது. மனிதர்களுக்கு தொண்டு செய்வதற்கு ஒட்டுமொத்தமாக செய்ய வேண்டிய சில பணிகளும் உள்ளன. அவை ஜமாஅத் அமைப்பின் கீழ் இருந்தவாறு செய்யப்படுகின்றன. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாக்களின் கண்காணிப்பின்கீழ் அனாதைகளுக்கும், விதவைகளுக்கும், இறைவழியில் கைதாகி இருப்பவர்களுக்கும், அஹ்மதிய்யத்திற்காக உயிர் தியாகம் செய்தவர்களின் குடும்பங்களுக்காகவும் முறையாக ஜமாஅத் அமைப்பின் கீழ் அவர்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆதரவற்ற நோயாளிகளுக்கு உதவி செய்யப்படுகிறது. தகுதியுள்ள மாணவர்களுக்கு கல்விக்கான உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஏழைகளுக்கு கோதுமையும், தேவையுள்ள ஏனைய பொருட்களும் விநியோகம் செய்யப்படுகின்றன. தகுதியுடையவர்களின் நலனும் வளர்ச்சியும் அதிகமாக கருத்தில் கொள்ளப்படுகின்றன. ஜமாஅத் சகோதரர்கள் இரத்த தானம் செய்தும், கண்கள் மற்றும் ஏனைய உறுப்புகளை கொடையாக வழங்கியும் மனித இனத்திற்கு தொண்டாற்றி வருகின்றனர். பிறகு இதையும் நினைவில் வைக்க வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வரும் பொதுத் தொண்டுகள் நம்மவர்களுக்காக மட்டும் செய்யப்படுவதில்லை. மாறாக, அதன் வட்டம் எல்லா கண்டங்களிலும் பரவி நிற்கின்றது.

உதாரணமாக, குறிப்பாக ஆப்ரிக்காவிலும் பொதுவாக எல்லா இடங்களிலும் கல்வி நிறுவனங்களும், மருத்துவமனைகளும் நிறுவப்பட்டிருக்கின்றன. மேலும் பல்வேறு இடங்களில் தண்ணீர் விநியோகத்திற்கான ஏற்பாட்டைச் செய்வது, மின்சாரத்திற்கான ஏற்பாட்டைச் செய்வது போன்ற மனிதர்களுக்கு தேவைப்படுகின்ற அடிப்படையானதிட்டங்களையும் இந்த ஜமாஅத் செயல்படுத்தி வருகின்றது. இதற்காக ஒரு பெருந்தொகை செலவிடப்படுகிறது. அதைக் கூட நமது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள்தான் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கின்ற ஆன்மாவுடன் ஒன்று திரட்டி வருகின்றனர்.

இதன் மூலமாக அல்லாஹ்வின் திருப்தி நமக்கு கிடைக்கின்றது. மேலும் இதன் மூலமாக பலகீனமான சகோதரர்கள் வலுவடைகின்றனர் என்ற தர்பிய்யத் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் சூரா அல்பகராவின் 266 வது வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறகின்றார்கள்:

அல்லாஹ் இறைவழியில் செலவு செய்வதற்கான இரண்டு குறிக்கோள்களை எடுத்துக் கூறுகின்றான். முதலாவது குறிக்கோள், இப்திகாயி மரலாத்தில்லாஹி. இரண்டாவது, தஸ்பித்தன் மின் அன்ஃபுஸிஹிம். அதாவது அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதும், சமுதாயத்தை வலுப்படுத்துவதும் ஆகும். ஏனென்றால் தர்மங்களை கொடுப்பதன் விளைவாக ஏழைகளின் முன்னேற்றத்திற்கான சந்தர்ப்பங்கள் உருவாகுகின்றது. அவர்களும் கூட அந்த சமுதாயத்தின் அங்கமாக ஆகிவிடுகின்றனர். எந்த சமுதாயத்தின் நபர்கள் வீழ்ந்து கிடக்கின்றனரோ அந்த சமுதாயமும் நிச்சயமாக வலுவடைய முடியாது. ஏனென்றால், வீழ்ந்து கிடக்கின்ற நபர்கள் அந்த சமுதாயத்தின் சுமையாக ஆகி விடுகின்றனர். அவர்கள் முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்க முடியாமல் தவிக்கின்றனர். எனவே தான் இறைவனுடன் எந்தவொரு தொடர்பும் இல்லாத ஐரோப்பிய சமுதாயங்களும் கூட சமுதாயத்திலுள்ள ஏழைகளின் முன்னேற்றத்தின் மூலமாகவே சுயமே அந்த சமுதாயமும் முன்னேறுகின்றது. மேலும் வளர்ச்சியடைகின்றது என்பதை கருத்தில் கொண்டவாறு முழுக்க முழுக்க அதற்காகவே அவர்களும் கூட தான தர்மங்களை வழங்குவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 612)

பிறகு காலத்தின் வழிகாட்டலுக்கேற்பவும் அவர்களது கண்காணிப்பின் கீழும் சில பொது நலப்பணிகளை செய்கின்ற துறைகளும் பணியாற்றி வருகின்றன. உலகம் முழுவதும் மிகுந்த கண்ணியமிக்க பார்வையுடன் அவை பார்க்கப்படுகின்றன. இதில் முதலிடம் பெறுவது Humanity First என்ற அமைப்பாகும். இந்த துறையானது துன்பத்தில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு உடனடியாக சிறந்த உதவிகளை வழங்குகின்றது. உலகில் எந்தவொரு பகுதியிலும் இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டாலும் புயல்கள், பூகம்பங்கள், வெள்ளப் பெருக்கு, பஞ்சம் போன்றவற்றால் பாதிப்பு ஏற்பட்டாலும் அல்லது போர்களில் ஏற்பட்ட அழிவுகளுக்கு மக்கள் இரையானாலும் அங்கெல்லாம் இந்த நிறுவனமானது தனது தொண்டுகளை சிறந்த முறையில் செய்து வருகின்றது.

எனவே மனித இனத்திற்கு தொண்டு செய்வது என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தில் காணப்படும் தனிச்சிறப்புமிக்க அம்சமாக இருக்கின்றது. அல்லாஹ் உலகம் முழுவதிலுமுள்ள அஹ்மதிகளுக்கு இதனையே தமது குறிக்கோளாக ஆக்கிக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்
எளியவன்

(மஸ்ரூர் அஹ்மது)
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்



ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி
வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி



அமைதி, அன்பின் தூதுவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா...)